DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| CC | 384 | 2016 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| LW | PW4 | சாம்பிராஸ்செல்வராஜ் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | | |
| முகவரி: | | | |
| Religion / Caste : | | *HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST* | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 22 /02/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் ஒட்டன்சத்திரம் சி.எப்.மருத்துவமனையில் அறுவைசிகிச்சை பிரிவில் இளவர் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். எங்கள் மருத்துவமனையில் ஜான்பினோ மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து தற்போது பணியிட மாற்றமாகி வெளியே சென்றுவிட்டார் மேற்படி மருத்துவர் ஜான்பினோ அவர்கள் அளித்த காயச்சான்று குறித்து எங்களது மருத்துவமனையில் எனக்கு வழங்கிய அதிகார கடிதத்தின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 19.09.2016 ம் தேதி அன்று மாலை 5.45 மணியளவில் மருத்துவர் ஜான்பினோ அலுவலலில் இருந்த போது அங்கு சிகிச்சையில் செல்வக்குமார் மற்றும் குப்புச்சாமி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்துள்ளார் மேற்படி சிகிச்சையில் செல்வக்குமாருக்கு தலையின் மேல்பகுதியில் இரண்டு வெட்டுக்காயங்கள் 8 x 1x 0.5 செ.மீ அளவிலும், வலதுபுற கண்புருவத்திற்கு அருகில் 1 செ.மீ அளவில் வெட்டுக்காயமும், வலதுபுற எல்போவில் சிராய்ப்பு காயம்ஒன்றும் இருந்து மேற்படி காயமானது சாதாரண காயம் என சான்று அளித்துள்ளார். செல்வக்குமார் என்பவரது காயச்சான்று அ.த.சா.ஆ.2. குப்புச்சாமி என்பவருக்கு 0.3x 1 செ.,மீ அளவில் ஒரு வெட்டுக்காயமானது தலைபின்புற பகுதியிலும், வலதுபுற தோள்பட்டையில் சதைபிடிப்பும் இருந்து முதலாவது காயம் கொடுங்காயம் என்றும், இரண்டாவது காயம் சாதாரண காயம் என்று சான்று அளித்துள்ளார். குப்புச்சாமி என்பவரது காயச்சான்று

அ.த.சா.ஆ.3.

<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

காயம்பட்ட இருவரும் வண்டியில் சென்று கீழேவிழுந்தால் நான் குறிப்பிட்டதுபோன்ற காயங்கள் ஏறப்ட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

(sd) Dr.Sampras selvaraj
Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

(sd). R.Pandy

Judicial Magistrate
Oddanchatram.
Date : 22/02/2021

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| CC | 384 | 2016 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| LW | PW3 | பழனிச்சாமி | |
| க/பெ/தந்தையின் பெயர் | | | |
| முகவரி: | | | |
| Religion / Caste : | | *HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST* | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 22 /02/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் பெரியகோட்டையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். ராயகவுண்டன்புதுாரில் சண்டை நடந்த தோட்டத்திற்கு போலீசார் வந்து விசாரித்தார்கள் அப்போது என்னிடம் மேற்படி கையெழுத்தை கேட்க அ.த.சா.ஆ.2. பார்வைமகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்தை செய்துக்கொடுத்தேன்.

எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை-

எனது சொந்த ஊர் பெரியகோட்டை என்றால் சரிதான். ராயகவுண்டன்புதுாருக்கு எதற்காக நான் வந்தேன் என்றால் மாரியம்மன்கோவிலுக்கு போய்விட்டு அவ்வழியாக வந்தேன். போலீசார் கையெழுத்து போடச்சொன்னதால் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான்கையெழுத்து செய்த பேப்பரில் என்ன விவரம் எழுதப்பட்டு இருந்தது என எனக்கு தெரியுமா என்றால் படித்து சொன்னார்கள் மேற்படி பேப்பரில் தோட்டத்தை சுற்றி என்ன என்ன இடங்கள் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை.

(sd) Palanichamy
Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

(sd) R.Pandy

Judicial Magistrate
Oddanchatram.
Date : 22/02/2021